**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த ரூபா 11,422,883 கிரயமான | சொத்துக்களின் 02 வகுப்புக்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்ட ரூபா 4,659,000 பெறுமதியான 16 வளிப்பதனாக்கிகள் தொடர்பாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 1,164,750 தொகை மீளாய்வாண்டின் இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்குரிய அவ் ஒதுக்கங்கள் தொடர்பாக ரூபா 582,375 பெறுமானத் தேய்வு பெறுமதி பின்னோக்கி சீராக்கப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டின் இலாபம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 4,659,000 பெறுமதியில் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 16 வளிப்பதனாக்கிகள் அந்த ஆண்டில் மூலதனாமாக்கப்பட முடியாதிருந்ததால் 2019 ஆம் ஆண்டில் அவ் இயந்திரங்கள் மூலதனாமாக்கபட்டிருந்தன. எனினும் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 582,375 தொகையான பெறுமானத்தேய்வு பெறுமதி 2018 ஆம் ஆண்டுக்குரியதாக பெறுமானத்தேய்வு இடப்பட்டிருக்கவில்லை. சபையின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்விடப்பட வேண்டும். அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 16 வளிப்பதனாக்கிகள் 08 ஆண்டு காலப்பகுதியினுள் (2018-2025) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட வேண்டும் என்பதே அவ்வாறு செய்ததற்கான காரணமாகும். | முன்னைய ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு பொருத்தமானவாறு பின்னோக்கி சீர்செய்யப்பட்ட பின்னர் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கட்டிடங்கள் | 151,933,809 | பட்டியல்கள் அல்லது பதிவேடுகள் | கட்டிடங்களின் பெறுமதியானது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,473,433,809 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதியின் பிரித்தெடுப்புக்களை காட்டுகின்ற பட்டியல்கள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் 2010.12.31 இல் உள்ளவாறான கட்டிடங்களின் பெறுமதி மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் உண்மையாக காணப்படுகின்றதா என்பதை சரிபார்ப்பதற்கு எந்தவொரு சான்றும் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதியை சரிபார்ப்பதற்கு தேவையான பட்டியல்கள்/ சான்றுகள் பேணப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பின்னினைப்பு 01 இல் வழங்கப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு சபையின் மொத்த பதவியணியினருக்கான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்காத அதேநேரம் சபையின் மனித வள அபிவிருத்தித் திட்டம் பின்னிணைப்பு 02 இல் வழங்கப்பட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு 12 மணித்தியாலங்களை விட குறையாத பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றினை தயாரிப்பதற்கு 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். |

**2.	நிதி மீளாய்வு**

**2.1	நிதி விளைவுகள்**

ஆண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 16,101,438 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 27,889,470 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 11,788,032 தொகையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

**3.	செயற்பாட்டு மீளாய்வு**

**3.1	சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கலகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவிக்குரிய ஆரம்ப சம்பள அளவுத்திட்டத்திற்கு முன்னாலுள்ள சம்பள அளவுத்திட்டமொன்றில் வைப்பதன் மூலம் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்ததால் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரிற்கு சம்பளங்கள் மற்றும் முற்பணங்கள் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 191,919 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய நிதி முகாமையாளரிற்கெதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2015.05.03 இல் இறந்த திருமதி. பி.யூ.டி.பண்டார என்பவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக 2017.08.25 மற்றும் 2020.01.07 ஆம் திகதிய கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அக் கடிதங்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்காததுடன் இதுவரை இறப்புச் சான்றிதழும் பெறப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் பெறவேண்டிய முற்பணங்களிற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |